1974 ஏப்ரல் 8]

Formation of road in Palavakkam.

*770 Q.—THIRU K. VEZHAVENDAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the proposal to take up the stretch of road from Palavakkam village in Ponneri taluk up to its terminal at Kavarai-pettai-Sathiavedu Highway under the Rural Road Scheme and to black-top it, ir under the consideration of the Government; and

(*b*) if so, when it will be completed?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் வைத்திருக்கின்ற விவர அறிக்கையில் பல ரோடுகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் 1,500-க்கு மேல் மக்கள் தொகை உள்ள கிராமங்களை இணைக்கும் பல ரோடுகள் போடப்படவில்லை. ஆகவே, பேருந்துகள் செல்கிற சாலைகளையும், 1,500-க்கு மேல் மக்கள் தொகை உள்ள இணைப்புச் சாலைகளையும் கிராமச் சாலைத் திட்டத்தில் அரசு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டம் இப்போது 80 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அதில் கும்முடிப்பூண்டிக்கு அதிகமாக ஒதுக்கப் பட்டிருக்கிறது. இன்னும் 79 ஒன்றியங்களுக்கு மூன்றும் திட்ட நிலையில் முதலிடம் கொடுக்க வேண்டியிருப்பதால் வேறு பல சாலைகளை எடுத்துக்கொள்கின்ற குறிப்பு தற்போது இல்லை.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது கும்முடிப்பூண்டிக்கு அதிகம் நிதி ஒதுக்கி யிருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய ஆண்டிப்பட்டிப் பகுதியில் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அவைகளை சீர்படுத்தி, அரசாங்கமே அந்த ரோடுகளை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, நிதி இப்போது ஒதுக்கப்படவில்லை. ஏற்கெனவே ஒதுக்கப் பட்டிருக்கிறது. இப்போது முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொன்ன 79 ஒன்றியங்களில் அவர்களுடைய பகுதி இடம் பெறுகிறதா என்று தெரியவில்லை. பார்த்துச் சொல்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்கூட இந்த பஸ்கள் போகக்கூடிய சாலைகளை எல்லாம் ஹைவேஸ் அல்லது அரசாங்கமே எடுத்துக்கொள்ளும் என்று அறிவித்து இருந்தார்கள். அதற்கு அடுத்து வந்த இந்த அரசாங்கத்தில் அந்தக் கருத்து இருக்கிறதா? அது எந்த நிலையில் இப்போது இருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இது நீண்டகாலமாகப் பரிசிலனை செய்யப்பட்டிருக்கிறது. பேருந்துகள் செல்லும் வழித்தடங்கள் எவை எவை என்று பார்த்து, எத்தனை ஆண்டுகள் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று பார்த்து, 5 ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்குமானால் அந்தச் சாலைகளை அரசாங்கமே எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்திருக்கிறோம். அதனால் இந்த ஆண்டு 1,000 மைல் அளவுக்கு எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியச் சாலைகளும் அதில் இணைந்திருக்கிறது. எல்லாச் சாலைகளையும் ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ள முடியாததால் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் இந்த கிராம இணைப்புச் சாலைகளை முக்கியமாக பேருந்துகள் செல்லும் சாலைகளை பல திட்டங்கள் மூலமாக—ஹைவேஸ், நேஷனல் ஹைவேஸ், ரூரல் ஒர்க்ஸ் என்று பல துறைகள் மூலமாகச் செப்பனிட்டு வருகிறது. இப்படி தனித்தனியாகப் பிரித்துச் செய்வதால், பணம் பல வழிகளில் பிரிந்து போவதால் ரோடுகளைச் சரியாக சீர்படுத்த முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசாங்கம் நேஷனல் ஹைவேஸிலிருந்து அதிகமாகப் பணத்தைப் பெற்று ரூரல் ரோட்ஸ் பிரிவின் கீழ் ஒரே துறையின் மூலம் எல்லா ரோடுகளையும் பராமரிக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1974 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலைத் துறையின் கீழ் இந்த ஆண்டு ரோடுகள் செப்பனிடும் பணி நடைபெறுது என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ் நாடு அரசு தொடர்ந்து அந்தப் பணியைச் செய்துவர வேண்டுமென்ற நோக்கத்தோடு செயலாற்றிக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோலச் செயல்படுவதில் எந்த விதமான தவறும் வராது. அப்படிச் செயல்படுவது நல்லது தான்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இனி இல்லை என்று சொன்னார்கள். இனி புதிய ரோடுகளை எடுத்துக்கொள்ளாவிட்டாலும் எடுத்துக்கொண்டுள்ள ரோடுகளை சீராக முடிப்பதற்கும் கல்வர்ட்டுகள், சிறு பாலங்கள் கட்டி முடிப்பதற்கும் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, கும்முடிப்பூண்டி ஒன்றியத்தில் 12.80 கிலோ மீட்டர் புதிய சாலைகள் போடப்படும். 33.70 கிலோ மீட்டர்—இப்போதுள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப்படும். அதுபோலவே எல்லாபுரம் ஒன்றியத்தில் 10.5 கிலோ மீட்டர் சாலைகள் அமைக்கப்படும். விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே இருக்கின்ற கிராமச் சாலைகள்—புதிதாகப் போடுகின்ற சாலைகள், இணைப்புச் சாலைகள் இவைகளைப் போடுவதற்காக ஒரு செப்பரேட் டிவிஷனை ஏற்படுத்த வேண்டுமென்ற யோசனை அமைச்சரவர்களிடம் இருந்தது. அது எந்த அளவில் இப்போது இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு பிரிவுகள் இரண்டு எஸ்.இ.-யின் கீழ் பணியாற்றி வருகின்றன. அதுவும் பெருவழி இலாகாவின் கீழ்தான் இருக்கிறது.

Collection of Panchayat taxes.

* 771 *Q.*—THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute a separate administrative body for the collection of Panchayat taxes; and

(*b*) if so, the details thereof?